# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 17 திங்கட்கிழமை 02.12.2024 கதிர் 68



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel



# கொழும்பில் ஆர்ப்பாட்டம் மூன்று பொலிஸார் காயம்!



கொழும்பு, டிசெ. 02

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவியேற்ற பின்னர் இடம்பெற்ற மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியின் காரணமாக கொழும்பில் பெரும் களேபரம் ஏற்பட்டது.

அங்கு இடம்பெற்ற தள்ளுமுள்ளு காரணமாகப் பொலிஸார் மூவர் காயமடைந்துள்ளனர். அவர்களில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்களில் நான்கு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பொது அமைதிக்குப் பங்கமேற்படுத்தியமை மற்றும் போக்குவரத்து நெருசலுக்கு உடந்தையாக இருந்தமை காரணமாகவே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாடசாலைகளில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நிரந்தரமாக ஆசிரிய சேவையினுள் உள்வாங்கக் கோரி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கல்வி அமைச்சுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதனாலேயே பத்தரமுல்லையில் பெரும் பரபரப்பேற்பட்டது. 2 ➤

## வெங்காய வரி குறைப்பு

கொழும்பு, டிசெ. 02

இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்துக்கான வர்த்தக வரியை குறைப்பதற்கு நிதிஅமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் பிரகாரம் இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் வெங்காயத்துக்கான 30 ரூபா வர்த்தக வரியை 10 ரூபா வரை குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூர் விவசாயிகளைப் பாதுகாக்கவும், நுகர்வோருக்கு நியாயமான விலையை உறுதி செய்யவும் குறுகிய கால நடவடிக்கையாக இதனை நடைமுறைப்படுத்த நிதி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதன் பிரகாரம், எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதி வரை வரி குறைப்பு அமலில் இருக்கும் எனவும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கை முடிவுகளின் பிரகாரம் சட்ட நடைமுறையின் கீழ் அதை எதிர்கொள்ள நடவடிக்கை 2 ➤

## இலங்கையின் 48ஆவதுபிரதம நீதியரசராக நீதியரசர் முர்து பெர்னாண்டோ நியமனம்!



இலங்கையின் 48ஆவது பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதியரசர் முர்து நிரூபா பிதுஷினி பெர்னாண்டோ இன்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இந்நாட்டின் பிரதம நீதிய ரசராக பதவியேற்கும் இரண்டாவது பெண்மணியாக முர்து பெர்னாண்டோ வரலாற்றில் இடம்பிடிக்கவுள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க முன்னிலையில் இன்று காலை சத்தியப் பிரமாண நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்துகொண்டார்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய ஓய்வு பெற்ற நிலையில், பிரதம நீதியரசராக நீதியரசர் முர்து நிரூபா பிதுஷினி பெர்னாண்டோவை 2 ➤

## சம்பந்தரின் வீடு கையளிப்பு!

கொழும்பு, டிசெ. 02

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனின் உத்தியோகபூர்வ இல்லம், அவர் மறைந்து ஐந்து மாதங்களின் பின்னர் நீதி, அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபை, உள்ளூராட்சி மற்றும் தொழிலாளர் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு 7, மலலசேகர மாவத்தையில் உள்ள இந்த உத்தியோகபூர்வ இல்லம் இராசம்பந்தனுக்கு 2015 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. அதன் பின்னர் நல்லாட்சி அரசாங்க காலத்தில் - 2019 பெப்ரவரி 26 ஆம் திகதி முன்னாள் அமைச்சர் கயந்த கருணாதிலகவினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத் தின் பிரகாரம், இரா சம்பந்தன் உயிருடன் இருக்கும் காலம் வரை பயன்படுத்திக்கொள்ளும் வகையில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உயர்தரப் பரீட்சைகள் முடிந்த பின்னரே உள்ளூராட்சி சபைத் தேர்தல் அறிவிப்பு!

கொழும்பு, டிசெ. 02

கடந்த மாதம் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிந்த பின்னரே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான அறிவித்தல் வெளியிடப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பரீட்சை நடைபெறும் காலப்பகுதியினுள் தேர்தல் அறிவிக்கப்பட்டால், வேட்பாளர்களின் பிரசார நடவடிக்கைகளால் பரீட்சைக்கு இடையூறு ஏற்படும் என்பதால் பரீட்சை முடியும் வரை தேர்தல் தொடர்பான அறிவிப்பை வெளியிடாதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என தேர்தல்கள் ஆணைக்குழு 2 ➤

## தரம் 5 புலமைப்பரிசில்: மீள் பரீட்சை பொருத்தமில்லை புள்ளிகளை வழங்க பரிந்துரை!

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்துவது பொருத்தமானதல்ல என்றும், வினாத்தாளுக்கான தேர்வை மீண்டும் நடத்துவதால் மாணவர்கள் பாதிக்கப்படலாம் எனவும் அமைச்சரவை பரிந்துரைத்துள்ளதாக சட்டமா அதிபர் இன்று உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் 2 ➤

## வெங்காய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்படும் எனவும் நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ உருளைக்கிழங்குக்கு 60 ரூபா என்ற விசேட வர்த்தக வரியில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை என நிதி அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஐ-04)

## இலங்கையின் 48 ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கும் பரிந்துரைக்கு அரசியலமைப்பு பேரவை கடந்த மாதம் அங்கீகாரம் வழங்கியிருந்தது.

1985 ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்து கொண்ட நீதியரசர் முர்து நிரூபா பிதுஷினி பெர்னாண்டோ, 1997 ஆம் ஆண்டு பிரதி சொலிசிட்டர் ஜெனரலாகவும், 2014 ஆம் ஆண்டு மேலதிக சொலிசிட்டர் ஜெனரலாகவும் பதவி உயர்வு பெற்றார். சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரசதரப்புச் சட்டத்தரணியாக இணைந்து 30 வருடங்களுக்கும் மேலாக அங்கு பணியாற்றியுள்ள இவர், 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் உயர் நீதிமன்ற நீதியரசராகவும், 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி பதில் பிரதம நீதியரசராகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

மொரட்டுவ பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரியின் பழைய மாணவியான முர்து பெர்னாண்டோ, கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்ட பீடத்தில் சட்டத்துறை இளமாணிப் பட்டம் பெற்றுள்ளார்.

## உயர்தரப் பரீட்சைகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக, கடந்த மாதம் 27 ஆம் திகதி முதல் நாளை வரை பரீட்சைஒத்திவைக்கப்பட்டது. பரீட்சைகளை இந்த வாரம் மீண்டும் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம் நாளை நடைபெறவுள்ளது என்றும், உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவது தொடர்பான வேட்பு மனுக்களை மீளப் பெறுவது தொடர்பில் இறுதித் தீர்மானம் இக் கூட்டத்தில் எடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## தரம் 5 புலமைப்பரிசில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலாவது வினாத்தாளின் 3 கேள்விகள் முற்கூட்டியே கசிந்ததாக தெரிவிக்கப்படும் நிலையில், பரீட்சைக்கு தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் குறித்த 3 வினாக்களுக்கும் முழுமை யான புள்ளிகளை வழங்குவதற்கு அமைச்சரவை பரிந்துரைத்துள்ளதாக சொலிசிட்டர் ஜெனரல் விராஜ் தயாரத்ன உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சையின் வினாக்கள் கசிந்தமை தொடர்பிலும், பரீட்சை நடத்தப்பட்ட விதத்தை சவாலுக்கு உட்படுத்தும் வகையிலும் பரீட்சைக்குத் தோற்றிய சில மாணவர்களும், பெற்றோரும் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மனுக்கள் இன்று உயர் நீதிமன்றத்தில் மீள அழைக்கப்பட்டன.

இதன் போது, மனுக்களை உயர் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் முழுமையாக விசாரணைக்கு உட்படுத்தக் கோரி, சட்டமா அதிபர் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளதாகவும் சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார். அதனை அடுத்து மனு மீதான விசாரணையை எதிர்வரும் 11ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ)

## கொழும்பில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டத்தின் காரணமாக கொட்டாவ - பொறளை 174 பஸ் மார்க்கத்தில் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசலால் அங்கு ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு, சமூக நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலீஸார் குறிப்பிட்டனர். (ஐ)

# லொஹான் ரத்வத்தவுக்கும், மனைவிக்கும் விளக்க மறியல் நீடிப்பு

கொழும்பு, டிசெ 02

சட்டவிரோதமான முறையில் பதிவு செய்யப்படாத சொகுசுக் கார் ஒன்றை வைத்திருந்தமை தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் லொஹான் ரத்வத்த மற்றும் அவரது மனைவிக்கு மீண்டும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, நுகேகொட நீதவான் நீதிமன்றில் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்ட லொஹான் ரத்வத்த மற்றும் அவரது மனைவியை எதிர்வரும் டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மிரிஹான பகுதியில் உள்ள அவரது மனைவியின் இல்லத்திலிருந்து இலக்கத் தகடு இல்லாத கார் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து ரத்வத்தே மற்றும் அவரது மனைவி கைது செய்யப்பட்டுள்ளனர்.

காவல்துறையினர் மேற்கொண்ட விசாரணைகளின் போது, கண்டியில் தற்கொலை செய்து கொண்ட தனது ஒருங்கிணைப்புச் செயலாளர், தனக்குத் தெரிவிக்காமல் காரை இல்லத்திற்குக் கொண்டு வந்ததாகவும், வாகனத்தின் உரிமையாளர் யார் என்பது தனக்குத் தெரியாது என்றும் லொஹான் ரத்வத்த கூறியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக முதலில் லொஹான் ரத்வத்த கைது செய்யப்பட்டதோடு, அவரது மனைவியும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டதை அடுத்து, தம்பதியினர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு இலங்கையில் ஒன்றிணைக்கப்பட்ட சொகுசு காரை பயன்படுத்திய குற்றச்சாட்டில் குறித்த இருவரும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# பல்கலைக் கழகங்களின் பேரவைக்குப் புதிய உறுப்பினர்கள் நியமனம்!

கொழும்பு, டிசெ 02

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் ஆளும் அதிகார சபையாகிய பேரவைகளுக்குப் புதிய உறுப்பினர்களை நியமிக்கும் பணிகளைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆரம்பித்துள்ளதாகத் தெரியவருகிறது.

பேரவை உறுப்பினர்களை நியமிப்பதற்கான மானியங்கள் ஆணைக்குழு வழிகாட்டல் சுற்றறிக்கையின் படி - அதற்கான தகுதி உள்ளவர்களை அதிகாரத்திலுள்ள ஆளும் கட்சியின் செல்வாக்கின் அடிப்படையிலேயே பல்கலைக்கழகங்களின் பேரவைக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவது வழமையாகும். குறிப்பாக அந்தந்தப் பிரதேசங்களில் செல்வாக்கு மிக்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சின் அடிப்படையில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் பேரவைக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு வந்தனர்.

இம்முறை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்த பின்னர், அக்கட்சியின் பிரதான கொள்கைகளில் ஒன்றான “ஊழலற்ற நாடு” என்ற தொனிப்பொருளின் கீழ் பல்கலைக்கழகங்களின் சுயாதிபத்தியத்துக்குப் பங்கம் ஏற்படாத வகையில், அழுத்தங்கள் மற்றும் சிபார்சுகளுக்கு அடிபணியாமல் சுதந்திரமான முறையில் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் புதிய பேரவை உறுப்பினர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சரும், பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய வழங்கியுள்ள அறிவுறுத்தலின் பிரகாரம் பல்கலைக்கழகங்களின் பேரவைகளுக்குப் புதிய உறுப்பினர்களை நியமிக்கும் பணிகளைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு ஆரம் பித்துள்ளதாகவும், முதற்கட்டமாக சில பல்கலைக் கழகங்களுக்கான புதிய பேரவை உறுப்பினர்களின் பட்டியலைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தயாரித்துள்ளது என அறியக்கிடைத்தது.

வழக்கமாக அரசியல் வாதிகளின் பட்டியலுக்கமைய இடம்பெறும் இந்தப் பட்டியல் இம்முறை அந்தந்த மாகாண ஆளுநர்களிடமிருந்து பெறப்பட்ட நற்சான்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இறுதி செய்யப்பட்டதன் அடிப்படையில் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் சகல பல்கலைக்கழகங்களிலும் புதிய பேரவை உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)



மாலைக்கதிர் Maalaikkathir
ஆசிரியர் பீடப் பணியாளர் தேவை
மாலைக்கதிர் நாளிதழில் ஆசிரியர் பீடத்தில் கடமையாற்றுவதற்கு பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன
- உதவி ஆசிரியர் / பயிலுநர்கள்
- ஒப்பு நோக்குனர்
தகுதி, திறமையின் அடிப்படையில் கொடுப்பனவு நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் ஆர்வமுடையவர்கள் தமது சுயவிபரக்கோவையினை 077 307 78799 என்ற whatsapp இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்

# சாதாரண தரப் பரீட்சை விண்ணப்பங்களுக்கான கால அவகாசம் நீடிப்பு!

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை 2024 (2025) கான விண்ணப்பங்களுக்கான காலக்கெடு நீடிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், டிசம்பர் 10, 2024 வரை விண்ணப்பங்களுக்கான காலக்கெடு நீடிக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# இந்தியக் கடற்படை பிடித்த ஐஸ் போதையுடன் கொழும்புக்கு வந்து சேர்ந்தது கஜபா கப்பல்!



கொழும்பு, டிச. 02

இந்தியக் கடற்பரப்பில் ஐஸ் போதைப்பொருளை ஏற்றிச் சென்ற போது, இந்தியக் கடற்படையினரால் கையகப் படுத்தப்பட்ட இரண்டு இலங்கை மீன்பிடி படகுகளும், அதில் பயணித்த சந்தேக நபர்களும் இன்று கொழும்பு துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டனர். இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான கஜபாகு கப்பல் மூலம் இவர்கள் அழைத்துவரப்பட்டனர்.

இந்திய கடற்படையும், இலங்கை கடற்படையும் இணைந்து மேற்கொண்ட இரகசியத் தகவல் பரிமாற்றத்தை தொடர்ந்து இந்தியக் கடற்பரப் பில் வைத்து இவ்விரு மீன்பிடிப் படகுகளும் கடந்த மாதம் 24, 25 ஆம் திகதிகளில் இந்தியக் கடற்படையினரால் கைய கப்படுத்தப்பட்டிருந் தன. அவற்றில் ஒரு படகில் சுமார் 400 கிலோ ஐஸ் போதைப்பொருள் இருந்ததாகவும், மற் றைய கப்பல் உதவிக்காக சென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்ட நபர்களையும், கைப்பற் றப்பட்ட ஐஸ் போதைப்பொருள் மற்றும் மீன் பிடி படகுகளை இந்தியக் கடற்படையினர் கடந்த 29ஆம் திகதி இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைத்தனர்.

சந்தேக நபர்களையும், கைப்பற்றப்பட்ட பொருள்களையும் நீதிமன்றத்தில் முற்படுத்து வதற்குக் கடற்படையின் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (இ)

## சபாநாயகர் அசோக ரன்வலவை சந்தித்த இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா!

கொழும்பு, டிசெ 02

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுக்கும், சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வலவுக்கும் இடையிலான சிநேகபூர்வ சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றது.

நாடாளுமன்றத்திலுள்ள சபாநாயகரின் அறையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்து கொண்டார்.

இந்த சந்திப்பின் போது புதிய சபாநாயகருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த இந்திய உயர்ஸ்தானிகர், இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் நீண்டகால மாகக் காணப்படும் தொடர்பை நினைவு கூர்ந்தார். மேலும், இரண்டு நாடுகளினதும் நாடாளுமன்றங்க ளுக்கு இடையிலான தொடர்புகளை வலுப்படுத்து வதற்கும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்றப் பணியாளர்களுக்கான பரிமாற்றத் திட்டங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் இந்திய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த சபாநாயகர், இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் காணப்படும் தொடர்புகளை தொடர்ந்தும் வலுவாகப் பேணுவதற்கும், பத்தாவது நாடாளுமன்றத்தில் இலங்கை - இந்திய நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுப்பதா கவும் உறுதியளித்தார்.

இரு தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற சிநேக பூர்வக் கலந்துரையாடலில், பொருளாதார மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாகவும், தொழில்நுட்ப அறிவைப் பரிமாறிக் கொள்ளுதல் போன்ற இரு நாடுகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பிலும் கவ னம் செலுத்தப்பட்டது. (ஐ-07)

## திருமறைக் கலாமன்றத் தினமும் வைரவிழா ஆரம்ப நிகழ்வுகளும்!

யாழ்ப்பாணம், டிசெ. 02

திருமறைக் கலாமன்றத்தின் மன்றத் தினம் நாளை 03 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கொண்டாடப்படவுள்ளது. 1965 ஆம் ஆண்டு டிசெம்பர் 03 ஆம் திகதி கலைத்தூது நீ.மரிய சேவியர் அடிகளா ரால் ஆரம்பிக்கப்பட்ட திருமறைக் கலா மன்றம் நாளை வைர விழா ஆண்டில் கால்பதிக்கின்றது. இதனை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட் டுள்ளன.

நாளை காலை 06.00 மணிக்கு, இல.17,மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைஞானசுரபி தியான இல்லத்தில் நன்றி வழிபாடும், முற்பகல் 10.00 மணிக்கு இல.238,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத் தூது மணிமண்டபத்தில் குருதிக் கொடை வழங்கும் நிகழ்வும், மாலை 4.00 மணிக்கு இல.286,பிரதான வீதி,யாழ்ப்பா ணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

மாலை 4.00 மணிக்கு இடம்பெற வுள்ள கலை நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண பிரதேசச் செயலர் சாம்பசிவம் சுதர்சனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந் நிகழ்வில் கலைத் தூது அழகியல் கல்லூரி மாணவிக- ளின் நடனம், திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் “நஞ்சுண்ட கண்டன்“ நாடகம்,“விண்ணக வீரன்“ வட மோடி நாடகம் என்பவற்றுடன் கலைஞர் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளன. (ஐ -77)

## கல்வி அமைச்சில் செப்பு திருட்டு தலங்காம பொலீஸில் முறைப்பாடு!

கொழும்பு, டிசெ. 02

பெலவத்தையில் அமைந்துள்ள கல்வி அமைச்சின் இசுருபாய கட்டிடத் தொகுதி யில் மின்னல் தடுப்புப் பாதுகாப்புப் பொறி முறைக்காகப் பொருத்தப்பட்டிருந்த சுமார் ஆயிரத்து 731 அடி அளவுடைய 51 இலட் சம் பெறுமதியான செப்புக் கம்பிகள் காணாமல் போயுள்ளதாக தலங்காம பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் மேற்கொண்ட முறைப்பாட்டை அடுத்து பொலீஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.

செப்புக் கம்பிகள் வெளியாட்கள் நுழைய முடியாத வகையில் அமைச்சுப் பணியாளர்கள் மட்டும் போய் வரக் கூடியதான கூரை மேற்பரப்பிலேயே பொருத்தப்பட்டிருந்தது எனவும், பாது காப்பு ஏற்பாடுகள் மிகவும் இறுக்கமாக இருந்த போதிலும், களவாடப்பட்ட செப்புக் கம்பிகள் அமைச்சு வளாகத்திலிருந்து மிகவும் நுணுக்கமான முறையில் வெளியே கொண்டு செல்லப்பட்டுள் ளது என்றும் பொலீஸார் தெரிவித்துள்ள னர்.

அமைச்சில் பணியாற்றும் பல்வேறு தரங்களையுடைய சுமார் எட்டுப் பேரிடம் இது வரை வாக்குமூலங்கள் பதிவு செய் யப்பட்டுள்ளன. விசாரணைகள் தொடர் கின்றன. (ஐ-77)











அம்பாறை, காரைதீவு - மாவடிப்பள்ளி பகுதியில், உழவு இயந்திரத்தில் பயணித்த போது ஏற்பட்ட விபத்தில் சிக்குண்டு, வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயி ரிழந்தவர்களின் ஜனாஸா வீடுகளுக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பி னருமான ரிஷாட் பதியுதீன், நேற்று ஞாயிற்றுக்கிழமை நேரில் சென்று அனுதாபங்களைத் தெரிவித்தார்.

இதன்போது, முன்னாள் இராஜாங்க அமைச்சரும் மக்கள் காங்கிரஸ் தவிசாளருமான அமீர் அலி, நாடாளு மன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் மற்றும் கிழக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் சுபைர் உட்பட கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் பல ரும் கலந்துகொண்டனர் (ஐ)

# பண்டையகால புத்தர் சிலை திருட்டு இரண்டு பிக்குகள் உட்பட மூவர் கைது



கண்டி, டிச. 02

இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான நாக தேவதையுடன் கூடிய பழங்கால உலோக புத்தர் சிலையை திருடிய இரண்டு தேரர்கள் மற்றும் சுற்றுலா ஹோட்டல் உரிமையாளர் ஒருவரை மாவனெல்ல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கரஹம்பிட்டிகொடவில் உள்ள கெத்தாராம எனும் புராதன விகாரையில் வைக்கப்பட்டிருந்த உலோக புத்தர் சிலையையே சந்தேகநபர்கள் இவ்வாறு திருடியுள்ளனர்.

மாவனெல்ல தெவனகல, வரலாற்று சிறப்பு மிக்க ரஜமஹா விகாரைக்கு சொந்தமான கரஹம்பிட்டிகொட கெத்தாராம புராதன விகாரையில் வைக்கப்பட்டிருந்த இரண்டு கோடி ரூபாவிற்கும் அதிகமான பெறுமதியான நாகையுடன் கூடிய புராதன உலோக புத்தர் சிலையை சிலர் திருடிச் சென்றுள்ளதாக தெவனகல ரஜமஹா விகாரையின் தலைவர் மாதிரிகிரி புக்னசார தேரர் சமீபத்தில் மாவனெல்ல பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

அதற்கமைய, சப்ரகமுவ மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன, திருட்டு தொடர்பான விசாரணைகளை கேகாலை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளார்.

தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, கிம்புல்விலவத்த தொம்பே பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றின் 28 வயதுடைய தேரர், கண்டி மஹய்யாவ பிரதேசத்தில் உள்ள விகாரையின் தேரர் மற்றும் பேராதனை கன்னோறுவ பிரதேசத்தில் உள்ள சுற்றுலா ஹோட்டல் ஒன்றின் உரிமையாளர் ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். தொம்பே விகாரையின் தேரரின் திட்டத்திற்கமைய இந்த திருட்டு இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது. திருட்டுக்கு பயன்படுத்தப்பட்ட இரண்டு கார்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்கள் மாவனெல்ல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (ஐ-04)

# கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு கால்நடைகளை கடத்த முயன்றோர் கைது!

கிளிநொச்சி, டிசெ 02

கிளிநொச்சி, புளியம்பொக்கனை பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு 12 மாட்டுக் கன்றுகளைக் கடத்திச் செல்ல முற்பட்ட சந்தேகத்தின் பேரில் நான்கு பேர் தருமபுரம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புளியம்பொக்கனை பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் கால்நடைகள் கடத்தப்படுவதாகப் பொலீஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் லொறி ஒன்றை மறித்துச் சோதனையிட்ட போது, கால்நடைகளை விற்பதற்குக் கால்நடை உரிமையாளர் வழங்கிய கடிதம், கால்நடைகளை இடமாற்றுவதற்கு கால்நடை வைத்தியரின் சிபாரிசு கடிதம் ஆகிய எதுவுமில்லாமல் 12 கன்றுகளைக் கொண்டு செல்வது பொலீஸாரால் அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, வாகனத்தில் சென்ற சாரதி உட்பட நான்கு பேரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் கால்நடைகளைக் கொண்டு செல்லப் பயன்படுத்திய லொறியும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களை இன்று நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள தருமபுரம் பொலீஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ-07)

# வெள்ளத்தின் பின் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம்!

வெள்ள அனர்த்தத்தின் பின்பு எலிக்காய்ச்சல் பரவும் ஆபத்து இருப்பதால், மக்கள் விழிப்பாக செயற்படுமாறு கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த. வினோதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நடந்த ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தை வைத்தியர் த. வினோதன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

அண்மை நாட்களாக நிகழ்ந்த வெள்ள அனர்த்தத்தினால் பெருமளவானோர் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்தனர். இவர்கள் வெள்ள நீரில் பயணம் செய்திருந்தனர். வெள்ளநீரில் கலந்துள்ள எலியின் சிறுநீர் மூலம் பக்ரீறியா தொற்று ஏற்பட்டு குறித்த நோய் ஏற்படுகிறது.

எனவே, கடுமையான காய்ச்சல் மற்றும் கால்நோ, கண்சிவப்பு போன்ற அறிகுறி காணப்பட்டால் மருத்துவ உதவியைப்பெற்று எலிக்காய்சலில் இருந்து பாதுகாக்குமாறு வைத்தியர் த. வினோதன் மக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

# மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்து நீடிப்பு

பல மாவட்டங்களுக்கு உட்பட்ட பல பிரதேச செயலகங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை அறிவிப்பை வெளியிட தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த எச்சரிக்கை அறிவிப்பு இன்று மாலை 04.00 மணி முதல் நாளை மாலை 04.00 மணி வரை அமுலில் இருக்கும் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. இதன்படி குறித்த பகுதிகளுக்கு எச்சரிக்கை நிலை அறிவிப்பை வெளியிட அந்த அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

**பதுளை மாவட்டம்:-** பதுளை, பசறை, ஹாலிஎலல, மீகஹகிவுல, பண்டாரவளை

**கண்டி மாவட்டம்:-** உடுதும்பர, உடபலாத, டெல்தொட்ட, கங்கவட கோரளை, பாதஹேவாஹெட, ஹாரிஸ்பத்து, பாததும்பர, யட்டிநுவர, மெததும்பர, தொலுவ, உடுநுவர, தும்பனே, பூஜாபிட்டிய, பன்வில, பஸ்பாகே கோரளை, அக்குரனை, அதலியகந்த, கங்க இஹல கோரளை

**கேகாலை மாவட்டம்:-** கேகாலை, ருவான்வெல்ல, புலத்கொஹூபிடிய, அரநாயக்க, மாவனெல்ல, யட்டியாந்தோட்டை

**குருநாகல் மாவட்டம்:** - ரிதிகம

**மாத்தளை மாவட்டம்:-** அம்பங்கக கோரளை, ரத்தோட்ட, உக்குவெல, வில்கமுவ, நாவுல, யடவத்த, பல்லேபொல, லக்கல பல்லேகம, மாத்தளை

**நுவரெலியா மாவட்டம்:** - ஹகுரன்கெத்த, கொத்மலை, வலப்பனை.







- உதய் -

# பேயென பெய்யும் மழை!

2024 க்கு அப்படியே நூறாண்டுகள் முன் போய் பார்த்தால் 1924 ஜூலை 12 இந்து 24 வரை தென்மேற்கு பருவ மழையின் பெருவெள்ளத்தைக் காட்டுகிறது வரலாறு.

வயநாட்டிலும் வைத்திரியிலும் ஜூலை 16 இல்- 34 செ.மீ 17 இல் - 53.34 செ.மீ

ஜூலை 12 முதல் 24 வரை கேரளாவில் மட்டும் 263 செ.மீ பேய்மழை கொட்டித் தீர்த்தது!

தென்கர்னாடகாவில் 150 செ.மீ.க்கும் மேல் அடைமழை!

1924 இல் மலையில் அணைகள் பெரிதாக இல்லாத காலகட்டம். கொடிவேரி அணை மற்றும் கல்லணை மட்டுமே காட்டாற்று வெள்ளத்தைத் தடுத்து தணிக்க இருந்தன. ஆனால் பெய்ததோ பேய்மழை.

சத்தியமங்கலத்தில் 23 அடியிலும் காவிரியில் 36 அடியிலும் உயரமெடுத்து பாய்ந்தது ஆற்றுவெள்ளம்!

அப்போதைய மதராஸ் மாகாணத்தில் மலபார், கோவை, தஞ்சை, சேலம், திருச்சி என மொத்தமாக 43000 மாடி, குடிசை வீடுகளைச் சிதைத்து போட்டது.

அடித்து வந்த ஆற்றுச்சகதியில் 12000 ஏக்கருக்கு 1.2 முதல் 6 அடி உயரம் வரை மணல்திட்டுகளைக் கொட்டிப் போனது. கல்லணைக்கு இருபுறமும் கரைகளைப் பெயர்த்து ஓடிய வெள்ளம் ஜூலை 29 இல் மட்டும் 136 பேரைக் காவு வாங்கியது.

காணும்திசையெல்லாம் வெள்ளக் காட்சி... காடுமேடெங்கும் பிணத்துர் நாற்றம்...

10 ஆயிரம் பேரைப் பலிகொடுத்த படுமோசமான வரலாற்றுத்துயரம் அது.

சாகுபடிக்கு விதைத்தவை, சாப்பாட்டுக்கு வைத்தவை, சம்பாதித்தவை, வீடு நிலம் சொத்து சொந்தம் என இழந்தவர்களின் ஓலக்குரல் பலநாட்களாய் நீண்டது...

சோறுடைத்த சோழநாட்டுத் தஞ்சையிலிருந்து பஞ்சம் பிழைக்க மலேசியாவுக்கு போனவர்களின் எண்ணிக்கை மலைக்க வைக்கிறது.

1925 இல் 45749
1926 இல் 86319
1927 இல் 62383
1928 இல் 19367
1929 இல் 61140

பசியைத் தீர்க்கவும் பஞ்சம் பிழைக்கவும் மொத்தமாக 274958 பேர் நாடோடிகளாக போய்ச் சேர்ந்தனர்.



காலநிலை மாற்றம் பற்றி தேர்தல் பரப்புரைகளில் ஐரோப்பிய நாடுகள் கவனங்கொண்டு பேசத்தொடங்கிவிட்டனர்.

பிரேசிலில் அமேசானைக் காப்பாற்றுவதற்கு எங்களுக்கு வாக்களியுங்கள் என்ற குரல் போன தேர்தலில் வலுவாக ஒலித்தது.

சஹாரா பாலைவனத்திற்கு தெற்கே சாஹேல் பகுதியின் ஆப்பிரிக்க நாடுகளில் இயற்கையாக நிகழும் Deforestation யைக் கட்டுப்படுத்த 2007 இலேயே Great Green Wall Project ஐத் தொடங்கி இப்போது வரை நிறைய சோதனைகளை முயன்று 4% தான் நிறைவேற்றியுள்ளார்கள்..



## உலகை அச்சுறுத்தும் காலநிலை மாற்றம்...



எல்நினோ பற்றிய எச்சரிக்கை எப்போதும் கொடுக்கப்படுகிறது.

இதைப் பற்றி இந்தியாவில் எந்த அரசியல்வாதியாவது பேசுகிறார்களா?!

காடு, மலை பற்றிய கவலையை தேர்தல் மேடைகளில் பதிவு செய்வது சீமான் மட்டும்தான்! பசுமைத்தாயகம் வழியாக ராமதாஸும் பூவுலகின் நண்பர்கள் போன்ற சில அமைப்புகளும் தான்..!

ராகுல்காந்தி கடந்த ஐந்தாண்டுகளாக வயநாட்டின் உறுப்பினர்... எத்தனை முறை காலநிலை மாற்றம் குறித்து கவலைப்பட்டிருப்பார்??

தண்டகாருண்ய காடுகளின் அழிப்புக்கெதிராக போராடிய மக்களை மாவோயிஸ்ட்களாக மாற்றிய காங்கிரஸ் குடும்பம் காலநிலை பற்றியோ காடுகளைப் பற்றியோ எந்தக் காலத்தில் கவலைப்பட்டிருக்கிறது?

பாஜகவுக்கு மாட்டுமூத்திரத்தை விட்டால் பேச ஒன்றும் தெரியாது...!

கடவுளின் தேசமா கேரளா? காடுகளை அழிப்பதில் இந்தியாவிலேயே மூர்க்கமாக செயல்படுவது கேரளா என்பதற்கு தரவுகளோடு வாதிட யாராவது வருவார்களா?

மேட்டூர் அணை நிரம்பி உபரிநீர் திறந்துவிடப்பட்டது...! வழக்கமான அளவைவிட 47 டி.எம்.சியை அதிகமாக பெற்றிருக்கிறது மேட்டூர் அணை.

இந்த நீரைத் தேக்கி வைக்க இந்த மூன்றாண்டுகளில் இந்த திராவிட விளம்பர மாடல் அரசு என்ன செய்திருக்கிறது?

சரபங்கா வடிநிலத் திட்டம் 2020 மார்ச் 4 இல் அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது...

9 ஒன்றியங்களில் 12 பொதுப்பணித் துறை ஏரிகளும் 88 ஊராட்சி ஒன்றிய ஏரிகளும் என 100 ஏரிகளை நிரப்பி 4300 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி செய்யக்கூடிய தமிழ்நாட்டின் மிகப்பெரிய வடிநில ஏரித்திட்டம் இது!

40 ஆயிரம் ஏக்கருக்கு நிலத்தடிநீரை உயர்த்துகிற 1000 கண்மாய் கிணறுகளுக்கு நீர்ச்செறிவு கொடுக்கக்கூடிய திட்டம்...!

முதல்கட்ட வேலைகள் திப்பம்பட்டி பிரதான நிலையத்தில் 2021 பிப்ரவரி 27 இல் முடிந்து குழாய்கள் மூலம் 56 ஏரிகளுக்கு நீர் வழங்கும்பணி நடந்தது...

565 கோடி ரூபாயில் உருவான திட்டத்தைப் பற்றி எந்தக் கவலையுமில்லாமல் கிடப்பில் போட்டுவிட்டு வாய்ச்சவடால் பேசிக்கொண்டிருக்கிறார் முதலமைச்சர்.

ஜூன் மாதத்தில் கிடைக்க வேண்டிய நீரைப் போராடி பெற்றுத்தரவும் துப்பில்லை... வானம் கொட்டித் தரும் நீரைத் தேக்கி வைக்கவும் வக்கில்லை...

ஏதாவது அபாயங்கள் நிகழ்ந்தால் உச்சுக்கொட்டி மூக்கு சிந்துவதை நிறுத்துங்கள்... அரசை நோக்கி கேள்வி கேட்டுப் பழகுங்கள்...

ஆயிரம் ரூபாய் கொடுத்தால் வாங்கிக் கொண்டு வாழுகிற நிலைமைக்கும் வெள்ளம், புயல் வந்தால் கையேந்துகிற நிலைமைக்கும் காரணம் அரசுதான்...!

இந்தியக் குடியரசு என்பதன் பொருள் நாம்தான்! நாம் அமைத்த வேலைக்காரர்கள்தான் அரசு தலைவர்கள்...!

"ஏன் ஒழுங்காக வேலை செய்யவில்லை ?" எனக் கேளுங்கள்... இல்லையெனில் அரசியலே பேசாதீர்கள்... சமையல் குறிப்புகளும் சினிமா விமர்சனங்களும் போதும் உங்களுக்கு..

# விசேட சலுகைகளை மீள்பரிசீலனை செய்வதற்கான அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு!







நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கும் கொடுப்பனவுகள் மற்றும் விசேட சலுகைகளை மீள்பரிசீலனை செய்வதற்கான குழுவின் அறிக்கை ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் விசேட சலுகைகளை மீள்பரிசீலனை செய்வது தொடர்பில் ஆராய்வதற்காக உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர் கே.டி. சித்ரசிறி தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை இன்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.



கடல்தொழில் பிரதி அமைச்சர் உறுதி

# மீனவர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் நிரந்தர தீர்வு கிடைக்கும்!

நாட்டிலுள்ள மீனவர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு விரைவில் நிரந்தர தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என கடல்தொழில் பிரதி அமைச்சர் ரி.ஜி. ரத்னகமகே உறுதியளித்துள்ளார்.

திருக்கோவில் பிரதேசத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்டிருந்த கடல்தொழில் பிரதி அமைச்சர் ரத்னகமகே அப்பிரதேசத்தில் வசிக்கும் மீனவர்களை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இக் கலந்துரையாடலின் போதே மீனவர்கள் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகளுக்கு தீர்வினை அரசாங்கத்தினூடாக பெற்றுக்கொடுப்பதாக உறுதியளித்தார்.

இதன்போது விநாயகபுரம் மீனவர்களினால் மகஜர் ஒன்றும் கடல்தொழில் பிரதி அமைச்சர் ரி.ஜி.ரத்னகமகேவிடம் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# சீரற்ற வானிலை பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரிப்பு!

நாட்டில் ஏற்பட்டுள்ள மோசமான காலநிலையினால் 1 இலட்சத்து 42 ஆயிரத்து 624 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் மொத்தமாக 4இலட்சத்து 79 ஆயிரத்து 871 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதில் 3,114 குடும்பங்களைச் சேர்ந்த 10, 204 பேர் தற்போது, 99 இடைத்தங்கல் முகாம்களின் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் மோசமான வானிலை காரணமாக 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை பதுளை, கொழும்பு, கம்பஹா, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய 09 மாவட்டங்களுக்கு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை இன்று மாலை 04.00 மணி வரை நீடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யானை தாக்கி கடற்படை அதிகாரி மரணம்!



வவுனியாவில் கடற்படை லெப்டினன்ட் தர அதிகாரி ஒருவர் காட்டு யானை தாக்குதலால் மரணமடைந்துள்ளதாக பூனாவ பொலிஸார் தெரிவித்தனர்.

பணி நிமித்தமாக கொழும்புக்கு சென்று விட்டு பேருந்தில் முகாமிற்கு திரும்பிய அதிகாரி வாகனத்தில் இருந்து இறங்கி முகாமிற்கு சென்று கொண்டிருந்த போது நேற்று இரவு (29) யானை தாக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பூனாவ கடற்படை முகாமில் கடமையாற்றிய மத்தலான, நிட்டம்புவவில் வசிக்கும் கடற்படை வீரரான லெப்டினன்ட் தர அதிகாரியே யானை தாக்கியதில் உயிரிழந்துள்ளார்.

யானை தாக்கியதில் பலத்த காயம் அடைந்த அவரை, கடற்படையினர் மற்றும் உள்ளூர் மக்களும் இணைந்து வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். பலத்த காயமடைந்த அதிகாரி வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த உத்தியோகத்தரின் மரணம் தொடர்பான நீதவான் விசாரணைகளின் பின்னர் பிரேத பரிசோதனை வவுனியா பொது வைத்தியசாலையில் நடத்தப்படவுள்ளது. பூனாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிப்பு

வர்த்தக நிலையங்களில் அரிசி, தேங்காய்,காய்கறிகள் ஆகியவற்றின் விலை அதிகரித்துள்ளதாக நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக பெரும்பாலான இடங்களில் தேங்காய் ஒன்று 160 -முதல் 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் காய்கறிகளின் விலைகளும் பாரியளவில் அதிகரித்துள்ளதாகவும், மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காய்கறிகள் மொத்தவிற்பனை நிலையங்களுக்கு வழங்கப்படுவதாகவும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

அந்தவகையில் போஞ்சி கறிமிளகாய் வட்டக்காய் கத்தரிக்காய் கரட் ஆகியவற்றின் விலை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வர்த்தக நிலையங்களில் தொடர்ந்-தும் அரிசிக்குத் தட்டுப்பாடு காணப்படுவதாகவும் நுகர்வோர் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் அனர்த்தத்திலிருந்து காப்பாற்றப்பட்ட கிராமம்!



மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வந்த கடும் மழை மற்றும் அதனால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட 812 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 681 நபர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை (1) வரை 28 நலன்புரி நிலையங்களில் வசித்து வருவதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 23 ஆம் திகதி முதல் நேற்று சனிக்கிழமை (30) வரை மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் மழை மற்றும் அதனால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மாவட்டத்தின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 19 ஆயிரத்து 811 குடும்பங்களைச் சேர்ந்த 68 ஆயிரத்து 334 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் கடுமையாக பாதிக்கப்பட்ட 10 ஆயிரத்து 263 நபர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் அவர்கள் 69 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் படிப்படியாக வெள்ளம் குறைவடைந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் தமது வீடுகளுக்குச் சென்றனர்.

இந்த நிலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை(1) மதியம் வரை 28 நலன்புரி நிலையங்களில் 812 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 681 நபர்கள் வசித்து வருகின்றனர்.

மேலும் தற்போது வரை 3 ஆயிரத்து 796 குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 57 நபர்கள் உறவினர்கள் நண்பர்கள் வீடுகளில் வசித்து வருவதாகவும் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் கடந்த வெள்ளிக்கிழமை நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மடுக்கரை கிராமத்தில் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அதிரடி நடவடிக்கை காரணமாக பாரிய அனர்த்தத்தில் இருந்து அக்கிராமத்தில் இருந்து வீடு ஒன்றும் , வீதியும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

மடுக்கரை கிராமத்தில் இரு குளங்களில் இருந்து வான் ஊடாக வெளிவந்த நீர் மடுக்கரை கிராமத்தில் இருந்த வீடு ஒன்றின் ஊடாக ஊடறுத்து சென்ற நிலையில் குறித்த வீட்டில் பாரிய அனர்த்தம் ஏற்பட்டு வீடு இடிபாடுகளுக்கு உள்ளாகியது. இந்த நிலையில் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கே.திலீபன் தலைமையிலான குழுவினர் விரைந்து செயல்பட்டு, நீர் வரத்தை முற்றாக தடுத்ததன் காரணமாக குறித்த அனர்த்தத்தில் இருந்து மடுக்கரை கிராமமும், குறித்த வீடும் பாதுகாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.12.2024 இல் வெளியிடப்பெற்றது.